116


…ECTOR OF SOC… WE…

- 6 OCT 2016

GUINDY, CHENNAI-600 …


<u>சுருக்கம்</u>


புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து 15.09.2008 முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த மாதாந்திர சிறப்பு ஓய்வூதிய திட்டத்தினை 15.09.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் விரிவுபடுத்தி ஆணை வெளியிடப்பட்டது மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி2) துறை.

அரசு ஆணை (நிலை) எண். 170

நாள் 03–09–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆவணி மாதம் 18ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 அரசு ஆணை (நிலை) எண். 391, நிதி (ஓய்வூதியம்)த்துறை நாள் 15.09.2008.

2 அரசு ஆணை (நிலை) எண். 146, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் : 16.11.2009

3 அரசு ஆணை (நிலை) எண். 175, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் : 31.12.2009.

மேலும் படிக்கப்பட்டது:-

4 சமூக நல ஆணையர், சென்னை 5. கடித எண். 1479/2010, NMP(A)-1 நாள் : 21.06.2010 மற்றும் 23.07.2010.

------

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணியாற்றி 15.09.2008 முதல் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு பின்வருமாறு சிறப்பு ஓய்வூதியம் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| அ. | சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர் மற்றும், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.700/– |
| ஆ. | சமையலர், அங்கன்வாடி உதவியாளர் நிலை 1 ஆகியோர்களுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.600/– |
| இ. | சமையல் உதவியாளர், அங்கன்வாடி உதவியாளர் நிலை 2 ஆகியோருக்கு | ரூ.500/– |

126

110

2. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களுக்கு மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட நெறிமுறையில் ஓய்வூதியபட்டியலை ஊதியம் பெற்று வழங்க உபயோகிக்கும் படிவத்திலேயே பெற்று வழங்கவும், இதற்கான நிதி ஒதுக்கீட்டினை எதிர்பாராமல் செலவினம் மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டது.

3. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து 15.09.2008 முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதிய திட்டத்தினை 15.09.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் விரிவுபடுத்தி சிறப்பு ஓய்வூதியம் வழங்க அனுமதித்து மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட சமூக நல ஆணையர், அவர்களின் கடிதத்தில், 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சத்துணவு பணியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.4.01 கோடி முழுவதும் செலவினம் மேற்கொள்ளப்பட்டதாகவும், 15.09.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டதால் கூடுதலாக ரூ.15.44 கோடி நிதி ஒதுக்கம் செய்யும்படி அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க நிதி ஒதுக்கத்தினை எதிர்பாராமல் செலவினம் மேற்கொள்ளலாம் என அனுமதித்து ஆணையிடப்பட்டதைப் போன்று சத்துணவு திட்டப் பணியாளர்களுக்கும் சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க நிதி ஒதுக்கத்தினை எதிர்பாராமல் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும்படியும் அரசைக் கேட்டுக் கொண்டார்.

5. சமூக நல ஆணையரின்கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த பின்னர் அதனை ஏற்றுக் கொண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர்களாக பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்குவது குறித்து கீழ்காணும் நடைமுறைகளை பின்பற்ற அரசு ஆணையிடுகிறது.

- அரசு ஆணை நிலை எண்.391, நிதி (ஊதியப் பிரிவு)த்துறை, நாள் 15.09.2008ன்படி 15.09.2008 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ (வயது முதிர்வு காரணமாக மட்டும்) பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய விதிகள் ஏற்படுத்தாத நிலையில் அரசு ஆணையின்படி தற்காலிகமாக சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்கலாம்.
- ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய கருத்துரு சம்பந்தப்பட்ட பணியாளரின் புகைப்படத்துடன் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சஉதி) அவர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.
- மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) அதனை கூர்ந்தாய்வு செய்து சம்மந்தப்பட்ட பணியாளருக்கு உரிய ஓய்வூதியத்தை ஒப்பளிப்பு செய்து ஆணையிடல்



128

111

வேண்டும். இதற்காக பிரத்யேகமாக ஒரு பதிவேடு பராமரித்தல் வேண்டும். சமூக நல ஆணையரகத்திற்கு நகல் சமர்ப்பித்திட வேண்டும்.

- மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) அவர்களின் ஒப்பளிப்பு ஆணையின்படி சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உரிய ஓய்வூதியத் தொகையை சம்மந்தப்பட்ட பணியாளரின் வங்கி சேமிப்புக் கணக்கில் சேர்த்திடலாம். இதற்காக பிரத்யேகமாக ஒரு பதிவேடு பராமரித்தல் வேண்டும்.

- மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட பணியாளரை சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு நேரிடையாக வரவழைத்து அடுத்த மாதத்திற்குண்டான ஓய்வூதிய விண்ணப்பத்தினை அளித்த பின்னரே ஓய்வூதியம் பெற்று வழங்கலாம்.

- ஓய்வூதிய பட்டியலை ஊதியம் பெற்று வழங்க உபயோகிக்கும் படிவத்திலேயே பெற்று வழங்கலாம். இதற்கான நிதி ஒதுக்கீட்டினை எதிர்பாராமல் செலவினம் மேற்கொள்ளலாம்.

- மாதாந்திர ஓய்வூதியம் பின்வரும் கணக்குத் தலைப்பில் ஒப்பளிப்பு செய்திட மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) க்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அத்தொகையினை வட்டார வளர்ச்சி அலுவலரை பெற்று வழங்கிடவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

> "2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் 102. சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் I திட்டத்தில் சேராதது AQ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற சத்துணவு பணியாளர்களின் வாழ்வாதார சிறப்பு ஓய்வூதியம் – 27. ஓய்வூதியங்கள் 05. சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"

(த.தொ.கு.2235–60–102–AQ–2752)

- பணியை ராஜினாமா செய்தவர்களும், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்கள் ஆவார்.

6. 15.09.2008க்கு முன்னர் ஓய்வு பெற்ற பணியாளர்களில் சிறப்பு ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் 15.09.2008க்கு பின்னர் ஓய்வு பெற்று சிறப்பு ஓய்வூதியம் பெறும் பணியாளர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை அதற்கான செலவின விவரங்களுடன் 2010–2011 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கம் பெற தேவையான கருத்துருவை அரசின் நிதி(சந)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.



130

112

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 49512/10 நாள் 02.09.2010 ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி.நிர்மலா
அரசுச்செயலாளர்

பெறுநர்,

1. சமூக நல இயக்குநர், சென்னை - 5.
2. ஆணையர், கருவூலம் (ம)
   கணக்குத்துறை, சென்னை 15.
3. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
   சென்னை 5/35/79.
5. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
6. அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
7. இயக்குநர், ஓய்வூதியம், சென்னை –6.

நகல்:-

1. மாநில கணக்காயர், சென்னை 18.
2. ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை 113.
3. தலைமை அரசுத்துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை 2.
4. ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை 3.
5. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந7) துறை, சென்னை –9.
6. இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.



132

113